# விவிலியம் காட்டும் ஒழுக்கமும் மீறல்களும்

***முனைவர் ஸ். ஜான்ஸி ராணி***
உதவிப் பேராசிரியர், தூய யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை, திருநெல்வேலி

***முன்னுரை***
*தமிழர்களின் சிந்தனையில் அறம் என்பது மிகவும் இன்றியமையாத இடத்தை வகித்து வந்துள்ளது. இவ்அறம் தனிமனிதனின் இல்லற வாழ்விலிருந்து தொடக்கம் பெற்றுப் பரவத் தொடங்கியது. மனிதனை வளர்ப்பதும், மனிதனை உயர்த்துவதும் ஒழுக்கம் ஆகும். இது தனக்கும், பிறருக்கும் துன்பம் தராமல் நடந்து கொள்ள உதவும். அவ்வாறாக, விவிலியத்தில் காணப்படும் ஒழுக்கங்களும், அதன் மீறல்களையும் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6472

**ஒழுக்கமுடைமை**

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது ஆகும். அதனைக் காத்துக் கொள்ளுதல் ஒவ்வொருவருடைய கடமை ஆகும். விவிலியம் அனைவருக்கும் தனித்தனியாக ஒவ்வொரு வசனங்களின் மூலமாக ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும் என்று அடியவர்களால் போதிக்கப்பட்டுள்ளது. அடியவராகிய பவுல் பிலிப்பு பட்டணத்தில் உள்ள பரிசுத்தவான்கள் அனைவருக்கும் கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் அநேக ஆலோசனைகளைக் கூறுகிறார். அதில் ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டு இருங்கள் என்று கூறுகிறார். இதனை,

"கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்க முள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்சீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்". (பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, பிலி. *4:8*, ப.*273*)

என்ற இவ்வசனத்தில் காணலாம். உண்மை, ஒழுக்கம், நீதி, கற்பு, அன்பு, நற்கீர்த்தி, புண்ணியம், புகழ் போன்றவற்றைகளைச் சிந்தித்துச் செயல்படல்வேண்டும் என்று புத்தி சொல்லுகிறார்.

**பெண் ஒழுக்கம்**

பெண்கள் பேண வேண்டிய பல்வேறு ஒழுக்கங்களை விவிலியம் நமக்கு கற்றுத்தருகிறது. ஒரு பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்றால்,

"அந்தப் படியே ஸ்திரிகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்" (பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, 3:11, ப.287) பெண்கள் நல்லொழுக்க முள்ளவர்களாகவும், மற்றவர்களைக் குறித்துத் தவறாகப் பேசாதவர்களாகவும், தெளிவான புத்திக்கூர்மை உள்ளவர்களாகவும், எல்லாக் காரியத்திலேயும் எப்பொழுதும் உண்மை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று அடியவராகிய பவுல் கூறுகிறார். மேலும்,

**"நல்லொழுக்கமுள்ள ஸ்திரி மானத்தைக் காப்பாள். பராக்கிரமசாலிகள் ஐசுவரியத்தைக் காப்பார்கள்"**

***(பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாடு நீதி 11:16, ப.772)***

என நீதிமொழிகள் கூறுகிறது. உயிரைவிட மானம் தான் பெரிது என்று கருதும் வீரமும் மானமும் கொண்ட பெண்ணாக நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து தங்கள் மானத்தைக் காக்க வேண்டும்.

## பெற்றோர் கண்காணியானவன் ஒழுக்கம்

ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்று விரும்புவார்கள். இது ஒவ்வொரு பெற்றோரின் கடமையும் ஆகும். விவிலியத்தில் பிரம்பைக் கையாளாதவன் தன் மகனைப் பகைக்கிறான் என்றும், தகப்பன் கண்டிக்காத புத்திரனுண்டோ! என்றும் கூறப்பட்டு உள்ளது. எனவே, தகப்பன் தன் பிள்ளைகளைக் கண்டித்து வளர்க்க வேண்டும் என்பது விவிலியத்தின் கருத்து ஆகும்.

"தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும்" (பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு 3:4, ப.287)

இவ்வசனத்தில் ஒரு கண்காணியானவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. சொந்தக் குடும்பத்தை மட்டும் அல்ல, தன் பிள்ளைகளைச் சகல காரியங்களிலும், நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், கீழ்ப்படிகிறவர்களாகவும் இருக்கும்படி வளர்க்க வேண்டும் என்று பவுல் கூறி உள்ளார்.

## ஒழுக்கத்திற்கு கேடு விளைவிப்பவை

பவுல் உதவிக்காரர்களும், முதிர்வயதுள்ள புருசர்களும் நல்லொழுக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். எதிரியானவன் கூட குற்றப்படுத்த முடியாத ஒழுக்கம் ஒவ்வொருவரிடமும் காணப்படுதல் வேண்டும். இதனை, "எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக" (பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, தீத்து 2:8 ப.295)

என்ற வசனத்தில் அறியலாம். எதிரியானவன் நம்மைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றும் இல்லாமல் வெட்கப்பட்டுப் போகும் படியான ஒழுக்கம் நம்மிடம் இருக்க வேண்டும் என்று விவிலியம் வலியுறுத்துகிறது. தேவையில்லாத காரியங்களைப் பேசுவது ஒழுக்கத்தைக் கெடுக்கும் என்கிறார் பவுல் அடிகளார். இதனை,

**"மோசம்போகாதிருங்கள் ஆகாத சம்பாசுணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்**

***(பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, 15:3 ப.243)***

என்ற வசனம் உணர்த்துகிறது. நன்மை தரும் சொற்களை மட்டும் சிந்தித்துப் பேசி நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ வேண்டும்.

**"சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது"**

**(பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, I கொரி 14:40, ப.241)**

எந்த காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் அதை ஒழுக்கமாகவும், கிராமமாகவும் செய்ய வேண்டும் என்று அடியவராகிய பவுல் புத்தி சொல்லுகிறார்.

**கூடா ஒழுக்கம்**

கூடா ஒழுக்கம் என்பது ஆண்கள் தங்கள் மனைவியைத் தவிர்த்து மற்ற பெண்களுடன் கூடுவது ஆகும். பழங்காலத்தில் பெண் உரிமை இல்லை. பெண்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். ஆண்கள் பல மனைவியரை மணந்து கொள்ளலாம். விலைமாதர்கள்வீட்டுக்கும் போய்வரலாம். இது தவறாக எண்ணப்படவில்லை. செல்வக்குடி மக்களே இந்தக் கூடா ஒழுக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இவர்களுடைய இன்ப வாழ்க்கைக்காகவே பரத்தையர் அல்லது விலை மாதர் என்ற பெண்கள் ஒரு தனிப்பிரிவாக இருந்தனர். இதன் வழி, தமிழ்நாட்டில் விபச்சாரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வெளிப்படையாக நடைபெற்று வந்ததை அறிய முடிகிறது.

ஆயினும், அறிஞர்கள் இவ்வொழுக்கத்தைக் கண்டித்து வந்தனர். விவிலியத்தில் இது விபச்சாரம் என்று அழைக்கப்படுகிறது. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்று பல இடங்களில் கூறப்பட்டு உள்ளது. மோசேயினுடைய நியாயப் பிரமாணத்தில் விபச்சாரம் செய்பவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளார். இது பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளது. இதனை,

"ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபச்சாரம் செய்தால், பிறன் மனைவியோடே விபச்சாரம் செய்த அந்த விபசாரனும், அந்த விபசாரியும் கொலை செய்யப்படக்கடவர்கள்"

*(பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாடு, லேவி 20:10, ப.152)*

என்ற வசனத்தில் காணலாம். புதிய ஏற்பாட்டில் விபச்சாரத்திலே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை வேதபாரர்களும், பரிசேயரும் இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். ஆனால் இயேசுவோ ஒன்றும் பேசாமல் கீழே குனிந்து விரலினால் தரையிலே எழுதிக்கொண்டு இருந்தார். அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டே இருந்ததினால் உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்றார். அவர் மறுபடியும் குனிந்து தரையிலே எழுதிக்கொண்டு இருந்தார். அவர்கள் தங்கள் மனசாட்சியினால் குத்தப்பட்டு பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய் போய் விட்டார்கள். இயேசு நிமிர்ந்து பார்த்த போது அந்தப் பெண்ணைத் தவிர வேறு ஒருவரையும் காணாமல் அவளை நோக்கி "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" என்றார்.

இயேசு விபச்சார பெண்ணுக்குத் தண்டனை கொடுக்கமாமல் மன்னித்து விட்டாலும் இறுதியாக விபச்சாரம் செய்யக்கூடாது என்றே வலியுறுத்துகிறார்.

"தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபச்சாரஞ்செய்கிறான். புருசுனாலே தள்ளப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபச்சாரஞ் செய்கிறான்"

*(பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு லூக் 16:18, ப.108)*

இதில் ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறு ஒருத்தியைத் திருமணம் பண்ணினால், அவன் விபச்சாரம் செய்கிறவனாயிருப்பான். மனைவியும் தன் புருசனைத் தள்ளிவிட்டு வேறொருவனைத் திருமணம் செய்தாள் அவள் விபச்சாரம் செய்கிறவளாயிருப்பாள் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, கணவன் மனைவியையோ, மனைவி கணவனையோ தள்ளிவிடுதல் கூடாது.

"விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது புர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று என்கிறார்"

*(பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, மத் 5:27, 28, ப.7,80*

இந்தப் பகுதியில் ஆதி முதலாக உள்ள எல்லோருக்கும் விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்றுகட்டளையிடப்பட்டுள்ளது. மேலும், ஒரு பெண்ணை இச்சையோடு பார்த்தால் கூட இருதயத்தில் விபச்சாரம் செய்யப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. விவிலியம் கூடா ஒழுக்கமாகிய விபச்சாரத்தை வெறுக்கிறது என்பதை அறியலாம்.

## முடிவுரை

விவிலியத்தில் ஒழுக்கம் என்பது சிறந்ததாகக் கருதப்பட்டுள்ளது. ஒழுக்கம் உயர்வாக மதிக்கப்பட்டது. மேலும் விபச்சாரம் என்பது கூடா ஒழுக்கமாக, செய்யக்கூடாத பாவமாகவே கருதியுள்ளது. எனவே ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து விவிலியம் கூறும் நன்னெறிகளைக் கடைப்பிடித்து வாழ்வோமாக.